1975 அக்டோபர் 25]

இனாம் கிராமங்களிலுள்ள புறம்போக்கு நிலங்கள்

** 56 வினா*—**திரு. ச. சங்குமுத்து தேவர்** : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இனாம் கிராமங்களில் உள்ள புறம்போக்கு நிலங்கள் அந்தந்தப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தர்மபுரி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய ஆறு மாவட்டங்களில் இனாம் கிராமங்களிலுள்ள புறம்போக்கு நிலங்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் இனாம் கிராமங்கள் இல்லை. மற்ற மாவட்டங்களில் உள்ள இனாம் கிராமத்திலுள்ள புறம்போக்கு நிலங்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களிடம் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர் : திருநெல்வேலி மாவட்டத்தில் இனாம் கிராமங்களிலுள்ள புறம்போக்கு நிலங்களைப் பஞ்சாயத்திடம் ஒப்படைக்காத காரணத்தால் அதில் கிடைக்கும் வருமானம் பஞ்சாயத்துக்குக் கிடைக்க முடியாமல் இருக்கிறது. சர்வே முடிந்த கிராமங்களையாவது உடனடியாக பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப் படாவிட்டாலும் நோட்டிபிகேஷன் பேட்டில் இருந்து தனியார் உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப் படுவதில் இனாம்தாருக்குப் பாத்தியதை என்ற பிரச்சினை இருக்குமானால் அரசு பரிசீலிக்கும். அவசரப்பட்டு அந்த நிலங்களைப் பஞ்சாயத்திடம் ஒப்படைப்பது தவறு. இனாம் கிராமங்களில் 10 ஆண்டு காலம், 50 ஆண்டு காலமாக உழுகிறவர்கள் இருக்கிறார்கள். ஜமீன் ஒழிப்புச் சட்டத்தைப் போல் இனாம் கிராமங்களைப் பொறுத்தவரையிலும்கூட உழுபவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்ற முறையில் பரிசீலிக்கப்பட வேண்டியிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இனாம் வில்லேஜசில் உள்ள புறம்போக்கு நிலங்கள் பஞ்சாயத்துக்கு பப்ளிக் பர்ப்பசுக்கு ஒப்படைக்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெரும்பாலும் ஊராட்சி மன்றத்திற்குத் தேவைப்பட்ட அளவு நிலங்கள் தரப்படுகின்றன. அந்த நிலத்தை விவசாயி உழுது கொண்டிருந்தால் அதை ஒப்படைப்பதில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, May I know from the Hon. Minister for Revenue the total extent of inam poramboke lands handed over to the Panchayats in Dharmapuri District ?

THE HON. THIRU S. MADHAVAN : I have no figures.

Salt Industry in Tuticorin.

* 57. Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state the stage at which the proposal, for developing salt industry in Tuticorin area, stands at present?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தூத்துக்குடியிலும், அதனைச் சுற்றிலுமுள்ள பகுதிகளிலும் உப்பளத் தொழில் வளர்ச்சிக்கான பகுதிகளைக் கண்டறிய ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தொழில் வணிகத்துறை இயக்குநரால் ஓர் அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கை பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி : இந்த ஆய்வுக் குழு பரிசீலனை செய்ததில் என்னென்ன தொழில்களை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது? அதற்கு உத்தேசச் செலவு எவ்வளவு ஆகும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. குழு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. அந்த அறிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் நிலையில் இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: உப்பு எல்லோருக்கும் எப்பொழுதும் தேவையாக இருக்கும் பொருளாக இருக்கும் காரணத்தால் நிரந்தரமாக அரசாங்கமே அந்தத் தொழிலை எடுத்துச் செய்வதற்கான முறையிலே ஏன் அணுகக் கூடாது? இந்த மாநிலத்திலிருக்கும் உப்பளங்களை மேம்படுத்தி நல்ல வருமானம் உள்ளதாகச் செய்வதற்கான முறையில் ஆராய்ச்சி செய்து முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?